RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 276 அக்டோபர் 9, 2026 வெள்ளிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

# டெல்லியில் 57ஆவது ஜிஎஸ்டி கவுன்சில்: அதிகாரிகளின் கைது அதிகாரம் ரத்து..!

புதுடெல்லி, ஆக.9-

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் 57-வது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. இதில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிதியமைச்சர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் ஜிஎஸ்டி நடைமுறைகளை எளிமைப்படுத்துவது, வரி செலுத்துவோருக்கான இணக்கச் சுமைகளைக் குறைப்பது உள்ளிட்ட பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

ஜிஎஸ்டி அதிகாரிகளின் கைது அதிகாரம் ரத்து

ஜிஎஸ்டி அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த கைது செய்யும் அதிகாரத்தை ரத்து செய்ய கவுன்சில் முடிவு செய்துள்ளது. இதன் மூலம் வரி தொடர்பான நடவடிக்கைகளில் முக்கியமான நடைமுறை மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

குற்றவியல் வழக்குக்கான வரம்பு ரூ.5 கோடியாக உயர்வு

ஜிஎஸ்டி தொடர்பான குற்றங்களில் குற்றவியல் வழக்கு தொடர்வதற்கான வரம்பு ரூ.1 கோடியில் இருந்து ரூ.5 கோடியாக உயர்த்தப்படுகிறது.

குறைந்தபட்ச தண்டனை நீக்கம்

குற்றங்களுக்கு விதிக்கப்படும் குறைந்தபட்ச தண்டனை நீக்கப்படுகிறது. இனி ஒவ்வொரு வழக்கின் தன்மையையும் கருத்தில் கொண்டு அபராதம், சிறைத் தண்டனை அல்லது இரண்டையும் விதிப்பது குறித்து நீதித்துறை முடிவு செய்யும்.



பொதுவான அபராதம் ரூ.10 ஆயிரமாக குறைப்பு

குறிப்பிட்ட குற்றங்களுக்கு தனியாக அபராதம் நிர்ணயிக்கப்படாத நிலையில் விதிக்கப்படும் பொதுவான அபராதம் ரூ.25 ஆயிரத்தில் இருந்து ரூ.10 ஆயிரமாக குறைக்கப்படுகிறது.

தாமதம் மற்றும் தவறுகளுக்கு நடவடிக்கையில் தளர்வு

ஜிஎஸ்டி தாக்கல் செய்வதில் தாமதம், தவறுகள் அல்லது வரி செலுத்துவதில் தாமதம் ஏற்படும் நிலையில், வசூல் வட்டி மற்றும் விகிதாச்சார அடிப்படையிலான அபராதம் மட்டுமே விதிக்கப்படும் வகையில் நடைமுறைகளை எளிமைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

நடைமுறைகளில் தளர்வு

ஜிஎஸ்டி கணக்கு தாக்கல் மற்றும் வரி பணத்தைத் திரும்பப் பெறும் நடைமுறைகளில் வரி செலுத்துவோருக்கு வசதியாக பல்வேறு தளர்வுகளை கொண்டு வர கவுன்சில் முடிவு செய்துள்ளது.

வரி விகித மாற்றங்கள் ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே

ஜிஎஸ்டி வரி விகிதம் தொடர்பான விவகாரங்கள் இனி ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும், இதற்காக பிரத்யேகமாக நடத்தப்படும் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் மட்டுமே விவாதிக்கப்படும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஜிஎஸ்டி வரி நடைமுறைகளை மேலும் எளிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணியை தனியாருக்குத் தாரைவார்ப்பதா?" – டிடிவி தினகரன் கண்டனம்

சென்னை, அக். 09-

சென்னை உட்பட 12 மண்டலங்களில் ஸ்மார்ட் மீட்டர்களைப் பொருத்துவதற்கு மின் பகிர்மானக் கழகம் வெளியிட்டிருக்கும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான அறிவிப்பை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்," என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணியைத் தனியாருக்குத் தாரைவார்க்கும் மின்சார வாரியத்தின் முடிவால், குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் 200 யூனிட் இலவச மின்சாரமும், விவசாயம் மற்றும் நெசவுத் தொழிலுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரமும் நிறுத்தப்படும் அபாயம் உருவாகும் என்பதோடு, மின்சார வாரியத்தில் தமிழக இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பும் பறிபோகும் என அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பதிவில், "சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், திருச்சி, மதுரை உள்ளிட்ட 12 மண்டலங்களில்



மறுசீரமைக்கப்பட்ட மின்விநியோகத் திட்ட த்தின் மூலம் (Revamped Distribution Sector Scheme) ஸ்மார்ட் மீட்டர்களைப் பொருத்துவதற்காக தமிழக மின் பகிர்மானக் கழகம் வெளியிட்டி ருக்கும் ஒப்பந்தப்புள்ளிகளுக்குக் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

சென்னை மாநகரத்தில் உள்ள அனைத்து நுகர்வோர்களுக்கும், மாநிலத்தின் பிற பகுதிகளில் உள்ள 50 லட்சம் தொழில் மற்றும் வணிக நுக ர்வோர்களுக்கும் ஸ்மார்ட் மீட்டர்கள் அமைக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படும் என்ற நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றிருந்த அறிவிப்பை மின்சார வாரியமே செயல்படுத்த முன்வ ராமல், தனியாருக்குத் தாரைவார்க்கும் வகையில் ஒப்பந்தப்புள்ளிகளை அறிவித்திருப்பது கடும் க ண்டனத்திற்குரியது.

ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணியைத் தனியாருக்குத் தாரைவார்க்கும் மின்சார வாரியத்தின் முடிவால், குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் 200 யூனிட் இலவச மின்சாரமும், விவசாயம் மற்றும் நெசவுத் தொழிலுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரமும் நிறுத்தப்படும் அபாயம் உருவாகும் என்பதோடு, மின்சார வாரியத்தில் தமிழக இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பும் பறிபோகும் சூழல் ஏற்படும் என மின்வாரியத் தொழிற்சங்கங்கள் கவலை தெரிவித்துள்ளன.

பிஹார் மற்றும் உத்தரப்பிரதேச மாநிலங்களில் இதேபோன்று ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை அமல்படுத்தி, ரீசார்ஜ் செய்யத் தவறினால் மின் துண்டிப்பு மற்றும் அபராதம் விதிக்கப்பட்ட தற்கு எதிராக, அம்மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து போராடிக் கொண்டிருப்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டியிருக்கிறது.

அதோடு, தமிழகத்தில் அறிமுகப்படுத்த ப்படவிருக்கும் ஸ்மார்ட் மீட்டர் திட்டம் பிரிபெயர்ட் (Pre-paid) திட்டமா அல்லது போஸ்ட்பெயர்ட் (Post-paid) திட்டமா? தமிழக மக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள சலுகை தொடருமா? பீக் ஹவர் நேரத்தில் கூடுதல் கட்டணம் வசூலிக்க ப்படுமா? ஏற்கனவே உள்ள 3 கோடி மீட்டர்களின் நிலை என்ன? என மின் நுகர்வோரின் எந்தவொரு கேள்விக்கும் பதில் அளிக்காமல், மொட்டைக் கடிதம் போல டெண்டர் அறிவிப்பை வெளியிட்டிருப்பது பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது.

ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த ஐந்து மாதங்களில் தூய்மைப் பணிகள் தொடங்கி, குடிநீர் விநியோகம், அரசுப் பேருந்துகளுக்கான ஓட்டுநர்கள், நடத்துநர்கள் நியமனம், பாதாளச் சாக்கடைத் திட்டம், ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணிகள் என தமிழகத்தின் அனைத்துப் பணிகளையும் தனியாரிடம் ஒப்படைத்துவிட்டு, தவெக அரசு யாருக்காக ஆட்சி நடத்தப்போகிறது என்ற கேள்விதான் ஒட்டுமொத்த மக்களின் மத்தியிலும் தற்போது எழுந்துள்ளது.

எனவே, தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கூடுதல் சுமையை ஏற்படுத்துவதோடு, இளைஞர்களின் வேலைவாய்ப்பையும் கேள்வி க்குறியாக்கும் சென்னை உட்பட 12 மண்டலங்களில் ஸ்மார்ட் மீட்டர்களைப் பொருத்துவதற்கு மின் பகிர்மானக் கழகம் வெளியிட்டிருக்கும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான அறிவிப்பை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என தவெக அரசை வலியுறுத்துகிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 'மானூர் அரசுப் பள்ளி குடிநீர் தொட்டியில் மனிதக் கழிவு' – சதியா என விசாரிக்க பாமக வலியுறுத்தல்

சென்னை, அக். 09-

"திண்டுக்கல் மானூர் பள்ளியில் மனிதக் கழிவு கல க்கப்பட்ட விவகாரத்தின் பின்னணியில் சதி உள்ளதா என்பது பற்றி விசாரணை நடத்த வேண்டும்," என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திண்டுக்கல் மாவட்டம், பழநி அருகே உள்ள மானூர் கிராமத்தில் அரசு தொடக்கப்பள்ளியில் குடிநீர் தொட்டிக்குள் மனிதக் கழிவு கலக்கப்பட்டதாகவும், இந்த நிகழ்வு இரு நாட்களாக மூடி மறை க்கப்பட்ட நிலையில் அதைக் கண்டித்து மாணவர்களின் பெற்றோர்களும், ஊர்மக்களுக்கும் போரா ட்டம் நடத்தியதாகவும் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. மனிதத்தன்மையற்ற இத்தகைய அருவருக்கத்தக்க செயல் கண்டிக்கத்தக்கது.

காலாண்டு விடுமுறை முடிந்து திங்கள்கிழமை பள்ளிக்கூடம் திறக்கப்பட்டபோது, உணவு தயாரி ப்பதற்கான ஏற்பாடுகளில் பள்ளி ஊழியர்கள் ஈடுபட்டபோது, இந்தக் கொடுமை தெரியவந்துள்ளது.



உடனடியாக தண்ணீர் தொட்டியை பள்ளி நிர்வாகமே சுத்தம் செய்ததும், அந்தத் தொட்டியின் தண்ணீரில் சமைக்கப்பட்ட உணவை உட்கொள்ளும் குழந்தைகளுக்கு உடல்நல பாதிப்பு ஏற்படுமோ? என்ற பெற்றோரின் அச்சத்தையும், கவலையையும் போக்கும் வகையில் மாணவ ர்களுடன் கல்வித்துறை அதிகாரிகள் இன்று காலை உணவு அருந்தியதும் நம்பிக்கையளிக்கக் கூடியவை.

அதே நேரத்தில் இந்த நிகழ்வு வெளியில் தெரியாமல் மூடி மறைக்கப்பட்டது ஏன்? இந்த நிகழ்வின் பின்னணியில் சதித் திட்டம் ஏதேனும் உள்ளதா? என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும். இதற்கு காரணமானவர்கள் யார்? என்பது அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட வேண்டும்.

மானூர் தொடக்கப்பள்ளியை சுற்றிலும் சுற்றுச்சுவர் கட்டப்படாததும், போதிய பாதுகாப்பு வசதிகள் இல்லாததாதும் தான் , இரவு நேரங்களில் சமூக விரோதிகள் உள்ளே நுழைந்து இத்தகைய செயல்களை செய்வதற்கு காரணம் ஆகும். இதைத் தடுக்கும் வகையில் மானூர் பள்ளி உள்பட தமிழகம் முழுவதும் அனைத்து அரசு பள்ளிகளிலும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட வேண்டும். மானூர் அரசு தொடக்கப்பள்ளியில் குடிநீர் தொட்டி மாற்றப்பட வேண்டும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பெரம்பூர் தொகுதி தேர்தல் வழக்கு: அக்.14–ல் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை: அக்.9-

பெரம்பூர் தொகுதியில் தான் வெற்றி பெற்றதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட தேர்தல் வழக்கை நிராகரிக்க கோரி முதல்வர் விஜய் தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பை, சென்னை உயர் நீதிமன்றம் அக்டோபர் 14-ஆம் தேதிக்கு தள்ளிவைத்துள்ளது.

பெரம்பூர் தொகுதியில், 53 ஆயிரத்து 715 வாக்குகள் வித்தியாசத்தில் முதல்வர் விஜய் வெற்றி பெற்றதை எதிர்த்து தொகுதி வாக்காளர் தினேஷ் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை நிராகரிக்கக் கோரி முதல்வர் விஜய் தரப்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனுவை நீதிபதி வி.லட்சுமி நாராயணன் விசாரித்தார். விஜய் தரப்பில், வேட்புமனுவில் அனைத்து தகவல்களையும் தெரிவித்துள்ளதாகவும், எந்த தகவலையும் மறைக்கவில்லை என வாதிடப்பட்டது.

தேர்தல் வழக்கை தாக்கல் செய்திருந்த வாக்காளர் தினேஷ் தரப்பில், முதல்வர் விஜய் தனது வேட்புமனுவில், பண்ருட்டியில் வாங்கியிருந்த 30 கோடி ரூபாய் மதிப்பிலான விவசாய நிலம் குறித்த விவரங்களை தெரிவிக்கவில்லை எனவும், தகவல்களை மறைத்தது, வாக்காளர்கள் சுதந்திரமாக முடிவெடுக்கும் திறனில் தேவையில்லாத தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் வாதிடப்பட்டது.

வேட்புமனுவில் தகவல்களை மறைப்பது, வாக்காளர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துவது தான் என சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பளித்துள்ளது. கொடைக்கானல் வில்பட்டி கிராமத்தில் வாங்கியுள்ளதாகக் கூறியுள்ள 50 செண்ட் நிலம், வருவாய் துறை ஆவணங்களின்படி, அரசு புறம்போக்கு நிலம் என தினேஷ் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

வேட்புமனுக்களில் குற்ற வழக்குகளை மறைப்பது எப்படி விதிமீறலோ, அதேபோல சொத்து விவரங்களை மறைப்பதும் விதிமீறல் மட்டுமல்ல ஊழல் நடவடிக்கை. விவரங்கள் மறைத்தது குறித்து தேர்தல் அதிகாரி முழுமையான விசாரணை நடத்த முடியாது. தேர்தல் வழக்கில் தான் இதுகுறித்து விரிவாக விசாரிக்க முடியும் என்பதால், தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கூடாது என வாதிடப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி லட்சுமிநாராயணன், ஆக்கிரமிப்பாளர் தேர்தலில் போட்டியிடுவதில் தகுதி இழப்பு ஏற்படுகிறதா? வில்பட்டி நிலம் தொடர்பாக விஜய், விற்பனை பத்திரத்தை வேட்புமனுவில் தாக்கல் செய்துள்ளாரே எனவும் கேள்வி எழுப்பினார். அதற்கு தினேஷ் தரப்பில், வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாக விளக்கமளித்தார்.

முதல்வர் விஜய் தரப்பில், வேட்புமனுவில் தகவல்களை மறைத்தது வாக்காளர்கள் சுதந்திரமாக முடிவெடுப்பதில் தாக்கத்தை ஏற்படுத்தும் என சென்னை உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு, குற்ற வழக்கு சம்பந்தப்பட்டது. விஜய் வசதிபடைத்தவர் என எல்லா வாக்காளருக்கும் தெரியும். அப்படி இருக்கும் போது, சொத்தை மறைத்ததாகக் கூறி, அது வாக்காளர் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என எப்படி கூற முடியும் என வாதிடப்பட்டது.

தினேஷின் தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி முதல்வர் விஜய் தாக்கல் செய்த மனு மீதான அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்ததை அடுத்து, அந்த மனு மீதான தீர்ப்பை, அக்டோபர் 14-ஆம் தேதிக்கு நீதிபதி தள்ளிவைத்தார்.

## தமிழகத்தில் நடப்பாண்டில் 21,655 பேருக்கு தற்போது வரை டெங்கு காய்ச்சல் பாதிப்பு – அமைச்சர் தகவல்

சென்னை, அக்.09-

நடப்பு ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் இதுவரை 21,655 பேருக்கு டெங்கு காய்ச்சல் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருண்ராஜ் தகவல் தெரிவித்து உள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் அரு ண்ராஜ் , டெங்குவால் இந்த ஆண்டில் இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தகவல் தெரிவித்துள்ளார். சில வாரங்களுக்கு முன் தலைநகர் சென்னையில் டெங்கு பாதிப்பு அதிகரித்து காணப்பட்ட நிலையில், தற்போது படிப்படியாக டெங்கு பாதிப்பு குறைந்து



வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தினசரி சராசரியாக 200 பேருக்கு புதிய பாதிப்புகள் உறுதி செய்ய ப்பட்டு வந்தாலும், பாதிப்பு ஒரேடியாக இரட்டிப்பாகவோ அல்லது மூன்று மடங்காகவோ அதிகரிக்கவில்லை. இதனால் நோய் பரவல் தற்போதைய நிலையில் ஓரளவுக்குக் கட்டுக்குள்ளேயே இருப்பதாகவும் கூறியுள்ளார். கொசு ஒழிப்புப் பணி யாளர்களை சில வீடுகளில் அனுமதிக்க மறுப்பதாக கூறப்படுகிணறது. கொசுப் பரவலை கட்டுப்படுத்த பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம், எனவே மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கேட்டு கொண்டுள்ளார். சென்னையை பொறுத்த வரை 3,700 பேர் வீடு வீடாகச் சென்று கொசு ஒழிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பருவமழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொசு ஒழிப்பு முயற்சிகளை பார்வையிட்டு ஆய்வு செய்ததாகவும் கூறினார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

# அதிவேக வாகனங்களைக் கட்டுப்படுத்த 'ஸ்பீடு ரேடார் கன்': மானாமதுரை அருகே போக்குவரத்து காவல்துறை அதிரடி சோதனை!

மானாமதுரை: அக்.09–

சிவகங்கை மாவட்டத்தில் சாலை விபத்துகளைத் தடுக்கும் வகையிலும், நிர்ணயிக்கப்பட்ட வேக வரம்பை மீறிச் செல்லும் வாகனங்களைக் கண்டறியவும் அதிநவீன 'ஸ்பீடு ரேடார் கன்' (Speed Radar Gun) தொழில்நுட்பம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, மானாமதுரை அருகே ராமேஸ்வரம் - மதுரை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சீனியப்பா நகர் பகுதியில், போக்குவரத்து ஆய்வாளர் வெங்கடேஷ் தலைமையில் அதிவேக வாகனங்களைக் கண்காணிக்கும் அதிரடி சோதனை நடைபெற்றது.





துல்லிய கண்காணிப்பு:

சாலையோரத்தில் ஸ்டாண்ட் மூலம் பொருத்தப்பட்ட இந்த 'ஸ்பீடு ரேடார் கன்' கருவியில், அப்பகுதிக்கு நிர்ணயிக்கப்பட்ட வேக வரம்பு முன்கூட்டியே பதிவு செய்யப்படுகிறது. அந்த வேக வரம்பை மீறி சீறிப்பாயும் வாகனங்களை இக்கருவி துல்லியமாகக் கண்டறிந்து பதிவு செய்கிறது.

விதிமீறும் வாகனத்தின் பதிவு எண் (நம்பர் பிளேட்) அடங்கிய வண்ணப் புகைப்படம், வாகனம் சென்ற வேகம், தேதி மற்றும் நேரம் ஆகியவை உடனுக்குடன் அச்சுப் பிரதியாகப் பெறப்படுகிறது. அத்துடன் வாகனத்தின் வேகம் குரல் பதிவாகவும் (Voice Record) சேமிக்கப்படுகிறது.

வழக்குப்பதிவு & அபராதம்:

வேக வரம்பை மீறிய வாகன ஓட்டிகள் மீது இ-சலான் (e-Challan) மூலமாகவும், நேரடி விசாரணை வாயிலாகவும் 'ஓவர் ஸ்பீட்' பிரிவின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது.

முதற்கட்டமாகத் தொடங்கப்பட்டுள்ள இந்த நவீன வாகன கண்காணிப்பு நடவடிக்கை, விரைவில் சிவகங்கை மாவட்டத்தின் அனைத்து முக்கிய நான்கு வழிச்சாலைகளிலும் தீவிரப்படுத்தப்படும் என காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில், வட கிழக்கு பருவமழை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் கானொலி காட்சி வாயிலாக நடைபெற்றது.



■ நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், (ABC&SPCA) பிராணிகள் இனப்பெருக்க தடுப்பு முறைகள் மற்றும் பிராணிகள் வதை தடுப்புச் சங்கஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது.




# பாடியநல்லூரில் ஆண்கள்- பெண்களுக்கான கபடி போட்டி

திருவள்ளூர், அக்.09–

மாதவரம் சட்டமன்ற தொகுதி திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டம் பாடியநல்லூர் பேரூராட்சி மற்றும் சோழவரம் கிழக்கு ஒன்றியம் தமிழக வெற்றிக் கழகம் டிவைன் ஃபிளேம்ஸ் விளையாட்டு பயிற்சி மையம் சார்பில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கபடி போட்டி பாடியநல்லூர் பேரூராட்சி முனீஸ்வரர் அங்காள ஈஸ்வரி ஆலய திடலில் தவெக நிர்வாகி வசந்தபிரியா ஏற்பாட்டில் நடைபெற்றது. போட்டியில் 80-க்கும் மேற்பட்ட அணிகள் விளையாடினர். விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் திருவள்ளூர் மேற்கு மாவட்ட தவெக செயலாளருமான எம். எல்.விஜய்பிரபு தலைமை ஏற்று கபடி போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுக்கு கோப்பை மற்றும் பரிசு தொகைகளை வழங்கினார். இதில் பாடியநல்லூர் பேரூராட்சி செயலாளர் முத்துக்குமார் உள்ளிட்ட தவெக நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் திரளாக கலந்துகொண்டனர்.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், 10.10.2026 அன்று திருப்பத்தூர் இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளியில் நடைபெறவுள்ள மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமிற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் திரு.வே.நல்லசிவன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (07.10.2026) நடைபெற்றது. உடன் மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் திருமதி.விஜயகுமாரி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.தணிகாசலம், முதன்மை கல்வி அலுவலர் திரு.புண்ணியகோட்டி, துணைக்காவல் கண்காணிப்பாளர் திரு.முரளி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி.கஸ்தூரி, மாவட்ட தொழில் மையம் பொது மேலாளர் திரு.இராமமூர்த்தி, மாவட்ட திறன் அலுவலர் திருமதி.நாஜியா நௌஷீன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.கண்ணன் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

# கல்லல் பேருந்து நிழற்குடை விவகாரத்தில் சர்ச்சை: நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலம் தொடர்பான பிரச்சினையில் எம்எல்ஏ தலையீடு எனக் குற்றச்சாட்டு அனைத்து கட்சியினர் எதிர்ப்பு!

சிவகங்கை அக்.09–

சிவகங்கை மாவட்டம் கல்லல் பேருந்து நிறுத்தத்தில் பயணிகள் நிழற்குடை அமைப்பது தொடர்பாக ஏற்பட்டுள்ள நில உரிமைப் பிரச்சினை, தற்போது அரசியல் சர்ச்சையாக உருவெடுத்துள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாகக் கூறப்படும் இடத்தில் புதிய நிழற்குடை அமைக்கும் முயற்சியில் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் குழந்தைராணி நாச்சியார் தலையிட்டதாகச் சில அரசியல் கட்சி நிர்வாகிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.



அரசு நிலமா? தனியார் நிலமா?

கல்லல் நகரின் மையப்பகுதியில், சுமார் ஒன்றரை ஏக்கர் பரப்பளவு கொண்ட புல எண் 547/1 நிலத்தின் ஒரு பகுதியில் நீண்டகாலமாகப் பேருந்து நிறுத்தம் செயல்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இந்த இடம் வருவாய்த்துறை ஆவண ங்களின்படி அரசுக்குச் சொந்தமானது என ஒரு தரப்பினரும், தனிநபருக்குச் சொந்தமானது என மற்றொரு தரப்பினரும் உரிமை கோருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பான வழக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஏற்கெனவே அப்போதைய மாவட்ட ஆட்சியர் மலர்விழி முன்னிலையில், கல்லல் ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் கல்லுவயல் கே.ஆர். அசோகன் ஏற்பாட்டில் பயணிகள் நிழற்குடை அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காலப்போக்கில் அந்த நிழற்குடை சேதமடைந்ததால், கடந்த மாதம் பொதுமக்கள் மற்றும் வர்த்தக சங்க நிர்வாகிகள் இணைந்து அதே இடத்தில் புதிய நிழற்குடை அமைத்துள்ளனர்.

இந்நிலையில், நிலத்திற்கு உரிமை கோரும் தனிநபர் அந்த நிழற்குடையை அகற்றிவிட்டு, தனது சொந்த ஏற்பாட்டில் மற்றொரு நிழற்குடையை அமைத்ததாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அனைத்துக் கட்சி நிர்வாகிகள் எதிர்ப்பு

இந்த விவகாரத்தில் திமுக கல்லல் ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், முன்னாள் ஆவின் தலைவர் கல்லுவயல் அசோகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.கே. உமாதேவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் சாத்தையா, முகவை கருணாநிதி, அதிமுகவைச் சேர்ந்த முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் வடிவேல், சேது முருகேசன், குணாளன், தமிழர் தேசம் கட்சியைச் சேர்ந்த நிலவன், தாளை, ரகு, குமார், சோலைமலை, பாக்யநாதன் உள்ளிட்ட பல்வேறு கட்சி நிர்வாகிகள் எதிர்ப்பு தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

ஊராட்சி நிதியில் நிழற்குடை அமைக்க உத்தரவு?

இதற்கிடையே, வருவாய்த்துறை, காவல்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள் முன்னிலையில் இருதரப்பினரையும் அழைத்துச் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் கட்டத்தேவன் கார்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் அலெக்ஸாண்டர் உள்ளிட்டோரும் பங்கேற்றதாகக் கூறப்படுகிறது.

கடந்த அக்டோபர் 6-ம் தேதி, கல்லல் ஊராட்சியின் பொதுநிதியிலிருந்து புதிய பயணிகள் நிழற்குடை அமைப்பதற்கான உத்தரவை வட்டார வளர்ச்சி அலுவலர் பிறப்பித்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

எம்எல்ஏ வருகையால் மீண்டும் சர்ச்சை

இந்த நிலையில், சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் குழந்தைராணி நாச்சியார் சம்பவ இடத்திற்கு வந்து புதிய நிழற்குடை அமைப்பதற்கான பூமிபூஜைப் பணிகளைத் தொடங்க முயன்றதாகக் கூறப்படுகிறது.

இதற்கு ஒரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், சார் ஆட்சியர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், வட்டாட்சியர், காவல் ஆய்வாளர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் உள்ளிட்டோர் பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர், தனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பயணிகள் நிழற்குடை அமைத்துத் தருவதாக எம்எல்ஏ உறுதியளித்ததாகக் கூறப்படுகிறது.

நில உரிமை தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாகக் கூறப்படும் நிலையில், அந்த இடத்தில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக உரிய சட்ட விளக்கம் பெற வேண்டும் என எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எம்எல்ஏ மீது எழுந்துள்ள குற்றச்சாட்டுகள்

நிழற்குடை விவகாரத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஒரு தரப்பிற்கு ஆதரவாகச் செயல்படுவதாகச் சிலர் குற்றம்சாட்டியுள்ளனர்.

மேலும், சம்பவ இடத்திலிருந்து கட்சியின் முக்கிய நிர்வாகியைத் தொடர்புகொண்டதாகவும், அதன் பின்னர் அங்கிருந்து வெளியேற அறிவுறுத்தப்பட்டதாகவும் தகவல்கள் கூறப்படுகின்றன.

பொதுமக்களின் கோரிக்கை என்ன?

கல்லல் பேருந்து நிறுத்தத்தைப் பயன்படுத்தும் பொதுமக்களுக்கு நிரந்தரமான, பாதுகாப்பான நிழற்குடை அமைக்க வேண்டும். அதேநேரத்தில், நில உரிமை தொடர்பான வழக்கின் சட்டநிலையைத் தெளிவுபடுத்தி, அரசுத் துறைகள் உரிய நடைமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது.



■ ஊத்துக்கோட்டை அருகே வெங்கல் கிராமத்தை சேர்ந்த கேப்டன் K.முரளி மகன் M.நந்திர்த்தன் மகள் M.நாத்விதா மற்றும் K.மோனிகிரிஷ் கோவாவில் தேசிய அளைவில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்று தங்க பதக்கம் வென்றுள்ள மூவருக்கு வெங்கல் ஊராட்சிமன்ற தலைவர் L.சுகந்திராணிலிங்கன் மற்றும் உறவினர்கள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், நண்பர்கள் தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# மதுரையில் அக்டோபர் 11-ல் மாநில அளவிலான போட்டிகள்!

மதுரை, அக்.09–

"வீரத்தின் பாரம்பரியம் நம் கலாச்சாரத்தின் பெருமை" என்ற நோக்கத்துடன் மாநில அளவிலான பல்வேறு போட்டிகள் மதுரையில் வருகிற 11-10-2026 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற உள்ளது.

மதுரை சிவகங்கை சாலை, திருமாஞ்சோலை பகுதியில் உள்ள ஆடுகளம் அக்ரி, வேடிக்கை மற்றும் சாகச பூங்கா, பிரிஸ்ட் யூனிவர்சிட்டி (Law College) அருகில் இப்போட்டிகள் நடைபெற உள்ளன.

இதில் சிலம்பம், யோகா, பரதநாட்டியம், வெஸ்டர்ன் டான்ஸ், கீபோர்டு மற்றும் பாட்டு உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்படுகின்றன.

போட்டிகள் வயது அடிப்படையில் 812 வயது, 1317 வயது, 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள், மேலும் அனைத்து வயதினருக்குமான பிரிவுகளிலும் நடைபெற உள்ளன.

போட்டிகளில் பங்கேற்க விரும்புவோர் 08-10-2026-க்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். முதலில் பதிவு செய்யும் 100 பேருக்கு இலவசமாக பனியன் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்புக்கு:

- சிலம்பம்: முத்து 98429 14292
- யோகா: மாஸ்டர் டாக்டர் பாண்டியராஜன் 97519 81861
- இசை: எஸ்.பி. செல்வா 98432 42260
- நடனம்: எஸ். பரமேஸ்வரி 70102 98067
- எம். முத்துகிருஷ்ணன், D.S., M.A. 98429 14292 / 98846 56544

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளலாம்.

# சூளைமேனி அருகே லாரி மோதி முறிந்த மரக்கிளை! கார் மீது விழுந்து விபத்து 2 மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு!

திருவள்ளூர், அக்.09–

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை அருகே கண்டெய்னர் லாரி மோதி அரசமரத்தின் கிளை முறிந்து கார் மீது விழுந்ததில், சுமார் இரண்டு மணி நேரம் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது.



திருப்பதியிலிருந்து வந்துகொண்டிருந்த கண்டெய்னர் லாரி ஒன்று, சூளைமேனி செங்காளம்மன் கோவில் அருகே சென்றபோது எதிர்பாராதவிதமாகச் சாலையோரம் இருந்த அரசமரத்தில் மோதியது. இதில் மரத்தின் ராட்சதக் கிளை ஒன்று பலமாக முறிந்து, அவ்வழியாகச் சென்று கொண்டிருந்த காரின் மீது விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காரின் முன்பகுதி பலத்த சேதமடைந்தபோதிலும், அதிர்ஷ்டவசமாக காரில் பயணித்தவர்கள் எவ்வித காயங்களுமின்றி உயிர் தப்பினர்.

சாலை குறுக்கே மரக்கிளை விழுந்ததால் அப்பகுதியில் சுமார் 2 மணி நேரம் போக்குவரத்து முற்றிலும் ஸ்தம்பித்தது. செய்தி அறிந்து உடனடியாகச் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த ஊத்துக்கோட்டை C1 காவல் நிலைய போலீசார் மற்றும் SPA-DU அரிபாபு ஆகியோர், முறிந்த மரக்கிளையை இயந்திரங்கள் மூலம் வெட்டி அகற்றிப் போக்குவரத்தைச் சீரமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், 10.10.2026 அன்று திருப்பத்தூர் இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளியில் நடைபெறவுள்ள மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமிற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன், இ.ஆ.ப., தலைமையில் (07.10.2026) அன்று நடைபெற்றது. உடன் மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் விஜயகுமாரி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் தணிகாசலம், முதன்மை கல்வி அலுவலர் புண்ணியகோட்டி, துணைக்காவல் கண்காணிப்பாளர் முரளி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கஸ்தூரி, மாவட்ட தொழில் மையம் பொது மேலாளர் இராமமூர்த்தி, மாவட்ட திறன் அலுவலர் நாஜியா நௌஷீன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



## தேனி மாவட்டம், பெரியகுளம் லக்கி மஹாலில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழா

பெரியகுளம் அக்.09-

தேனி மாவட்டம், பெரியகுளம் லக்கி மஹாலில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் பெரியகுளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரியகுளம் வட்டாரம் மற்றும் தேனி நகர்ப்புறத்தைச் சேர்ந்த 175 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் .க.சபரி ஐங்கரன்ஆகியோர் வளைகா ப்புசீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்கள்.

தமிழ்நாடு அரசு பெண் குழந்தைகளின் நலனுக்கென பல்வேறு திட்டங்களை செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, கர்ப்ப காலங்களில் கர்ப்பிணித் தாய்மா ர்களுக்கும், பிறக்கப்போகும் குழந்தைகளுக்கும் குறிப்பாக 6 மாதத்திலிருந்து 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து வழங்க ப்படுகிறது. மேலும், கர்ப்பி ணிப் பெண்கள், கர்ப்பகா லத்தில் மகிழ்ச்சி யாகவும், ஆரோக்கியமாகவும் இருந்தால் தான், அவர்களுக்கு பிறக்கும் குழந்தை ஆரோக்கியமான, அறிவான குழந்தையாக இருக்கும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அறிவியல் பூர்வமான நிகழ்ச்சியாகும். சாதி மத வேறுபாடின்றி அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களும் இந்த திட்டத்தால் பயன்பெற்று வருகிறார்கள்.

இன்றைய தினம் பெரியகுளம் வட்டாரம் மற்றும் தேனி நகர்ப்புறத்தைச் சேர்ந்த 175 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நடத்தப்பட்டு, சேலை, வளையல், மஞ்சள் குங்குமம், பழ ங்கள் போன்றவற்றை தாம்பூலத்தட்டில் வைத்து, சீர்வரிசை பொருட்களும் வழங்கப்பட்டதுடன், சக்கரைப்பொங்கல், எலும்பிச்சை சாதம், தக்காளி சாதம், தயிர் சாதம் மற்றும் புளி சாதம் உள்ளிட்ட ஐந்து வகையான கலவை சாதங்களும் பரிமாறப்பட்டது.

இவ்விழாவில் ஊட்டச்சத்துக் கண்காட்சி அமைக்கப்பட்டு காய்கறிகள், பழங்கள், சிறுதானியங்கள், வளர்ச்சி தரும் உணவுகள், சக்தி தரும் உணவுகள், இரும்புச் சத்து நிறைந்த உணவுகள், கீரை வகைகள், அயோடின் சத்து நிறைந்த உணவு வகைகள் மற்றும் எடை ஆய்வின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும், ஊட்டச்சத்து நலக்கல்வி, கர்ப்பிணி பெண்கள் உண்ண வேண்டிய உணவு வகைகள், எடை அதிகரிப்பின் விளக்கங்கள். இரும்புச்சத்து மாத்திரை உட்கொள்ளுவதன் அவசியம் குறித்து மருத்துவ அலுவலர்களால் எடுத்துரைக்கப்பட்டது. இந்நிகழ்வில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ரேவதி,வட்டார மருத்துவ அலுவலர்கோமதி மற்றும் அரசு அலுவலர்கள், அங்கன்வாடி மையப் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




## கம்பம் அரசு மருத்துவ மனையில் 50 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்: தாய் மாமன் தங்கம் திட்டத்தில் ஜெகநாத் மிஸ்ரா எம் எல் ஏ அணிவித்தார்

கம்பம், அக்.09-

தேனி மாவட்டம் கம்பம் அரசு மருத்துவமனையில் தாய் மாமன் தங்கம் திட்டத்தின் கீழ் 50 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கம்பம் அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர் டாக்டர் பானுமதி தலைமை தாங்கினார்.

கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, 50குழந்தைகளுக்கும் தங்க மோதிரங்களை அணிவித்து வாழ்த்தினார்.

அப்போது எம்.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா பேசியதாவது:-

முதலமைச்சர் விஜய் தலைமையிலான அரசு பதவியேற்று 4 மாதங்களிலேயே தேர்தல் அறிக்கையில் அளித்த பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றியும் தேர்தல் அறிக்கையில் இடம்பெறாத பல்வேறு மக்கள் நலத்திட்டங்களையும் செயல்படுத்தி, மக்களின் தேவைகளை அறிந்து செயல்படும் சிறப்பான ஆட்சியை நடத்திவருகிறார்

பெண்களின் உடன்பிறந்த சகோதரராக இருந்து வளை காப்பு நிகழ்ச்சிகளை நடத்திபிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து, "தாய் மாமன் நான் இருக்கிறேன்" என்ற நம்பிக்கையையும் அளித்து வருகிறார்.

முதலமைச்சரின் அறிவுறுத்தலின் படி செயல்படுத்தப்படும் இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்கள் மூலம் ஏழை எளிய மக்கள் பயனடைந்து வருகின்றனர்பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை நல்ல முறையில் பராமரித்து, அவர்களின் உடல்நலம் மற்றும் எதிர்கால கல்வியில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

நிகழ்ச்சியில் தேனி மாவட்ட கழக துணைச் செயலாளர் கூடல் செல்வேந்திரன், செயற்குழு உறுப்பினர் அய்யர், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை பணியா ளர்கள் கலந்து கொண்டனர்.

## கனடா எழுத்தாளர் ஆன் கார்சனுக்கு இலக்கிய நோபல் பரிசு அறிவிப்பு

ஸ்டாக்ஹோம், அக்.09-

கனடாவைச் சேர்ந்த எழுத்தாளர் ஆன் கார்சனுக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய இலக்கிய மரபோடு ஒரு விளையாட்டுத்தனமான உரையாடலை நிகழ்த்தி, சமகால இலக்கியத்துக்கு புதிய வடிவங்களை உருவாக்கிய துணிச்சலான மற்றும் புதுமையான படைப்புகளுக்காக கனடா எழுத்தாளர் ஆன் கார்சனுக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்படுவதாக ஸ்டாக்ஹோமில் உள்ள ஸ்வீடிஷ் அகாடமி அறிவித்தது. இந்தப் பரிசின் மதிப்பு 12 மில்லியன் ஸ்வீடிஷ் கிரவுன்கள் (1.2 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) ஆகும்.

ஆன் கார்சன் 1990-களில் பல குறிப்பிடத்தக்க படைப்புகளை வெளியிட்டார். தனது ஒட்டுமொத்த எழுத்துப் பயணத்திலும் கவனத்துக்குரிய பாணியில் படைப்புகளை உருவாக்கியவர் ஆன் கார்சன்.

கனடாவை சேர்ந்த கவிஞரும் கட்டுரையாளருமான ஆன் கார்சனின் படைப்புகள் பெரும்பாலும் கவிதை, உரைநடை, உரையாடல் மற்றும் மொழிபெயர்ப்பு ஆகியவற்றை ஒன்றிணைத்து, எந்தவொரு குறிப்பிட்ட இலக்கிய வகைக்குள்ளும் அடங்காத ஒரு கலவையாக அமைகின்றன.

செவ்வியல் கிரேக்க இலக்கியத்தின் மொழிபெயர்ப்புகளுக்காக அவர் பரவலாக அறியப்படுகிறார். இந்த இலக்கிய மரபு அவரது படைப்புகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஓபரா இசை நாடகங்களுக்கான உரை (libretti) முதல் இலக்கிய விமர்சனம் மற்றும் 1998-ல் வெளியான 'ஆட்டோபயோகிராபி ஆஃப் ரெட்' போன்ற கவிதை நாவல்கள் வரை அவரது படைப்புகள் பெரும் வரவேற்பை பெற்றன.

அவரது எழுத்து நடைக்கு சிறந்த உதாரணமாக 2019-ல் வெளியான 'நார்மா ஜீன் பேக்கர் ஆஃப் ட்ராய்' (Norma Jeane Baker of Troy) என்ற நிகழ்த்துக் கலைப் படைப்பைக் குறிப்பிடலாம். இது யூரிபிடிஸின் 'ஹெலன்' நாடகத்தில் வரும் ட்ராய் நகரின் ஹெலன் பற்றிய கதையையும், மர்லின் மன்றோவின் கதையையும் ஒன்றிணைக்கிறது என்று நோபல் பரிசுக் குழு விவரித்துள்ளது.



## பறவை காய்ச்சல் பரவி வரும் நிலையில் மாநில எல்லையில் திருப்பி அனுப்பப்படும் கோழி வாகனங்கள்

ஆந்திரா, அக். 09-

ஆந்திர மாநிலத்தில் பறவை காய்ச்சல் பரவி வரும் நிலையில் தமிழ்நாட்டில் பறவை காய்ச்சலை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வேலூர் மாவட்டம் காட்பாடி கிறிஸ்டியான் பேட்டை மாநில எல்லை சோதனை சாவடியில் கால்நடைத்துறையினரின் 24 நேரமும் கண்காணித்து வருகின்றனர். மேலும் ஆந்திராவில் இருந்து கோழி மற்றும் முட்டை ஏற்றி வரும் வாகனங்கள் தமிழ்நாட்டிற்குள் அனுமதிக்காமல் திருப்பி அனுப்பப்பட்டு வருகிறது.

## தமிழகத்தில் நடப்பாண்டில் 21,655 பேருக்கு தற்போது வரை டெங்கு காய்ச்சல் பாதிப்பு - அமைச்சர் தகவல்

சென்னை, அக். 09-

நடப்பு ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் இதுவரை 21,655 பேருக்கு டெங்கு காய்ச்சல் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருண்ராஜ் தகவல் தெரிவித்து உள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் அரு ண்ராஜ் , டெங்குவால் இந்த ஆண்டில் இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தகவல் தெரிவித்துள்ளார். சில வாரங்களுக்கு முன் தலைநகர் சென்னையில் டெங்கு பாதிப்பு அதிகரித்து காணப்பட்ட நிலையில், தற்போது படிப்படியாக டெங்கு பாதிப்பு குறைந்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தினசரி சராசரியாக 200 பேருக்கு புதிய பாதிப்புகள் உறுதி செய்ய ப்பட்டு வந்தாலும், பாதிப்பு ஒரேடியாக இரட்டி ப்பாகவோ அல்லது மூன்று மடங்காகவோ அதிகரிக்கவில்லை. இதனால் நோய் பரவல் தற்போதைய நிலையில் ஓரளவுக்குக் கட்டுக்கு ள்ளேயே இருப்பதாகவும் கூறியுள்ளார். கொசு ஒழிப்புப் பணி யாளர்களை சில வீடுகளில் அனுமதிக்க மறுப்பதாக கூறப்படுகி ணறது. கொசுப் பரவலை கட்டுப்படுத்த பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம், எனவே மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கேட்டு கொண்டுள்ளார். சென்னையை பொறுத்த வரை 3,700 பேர் வீடு வீடாகச் சென்று கொசு ஒழிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பருவமழைக்கால முன்னெ ச்சரிக்கை நடவடிக்கையாக கொசு ஒழிப்பு முயற்சிகளை பார்வையிட்டு ஆய்வு செய்ததாகவும் கூறினார்.




## திண்டுக்கல் மாவட்டம் பழனியில் உள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரியில் தமிழின் மகத்துவம் குறித்த ஒரு நாள் சிறப்பு பயிலரங்கம்

திண்டுக்கல், அக்.09-

சுயநிதி பிரிவு தமிழ்த்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த பயிலரங்கம், கல்லூரி தாளாளர் வெங்கடேஷ் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், கல்லூரி முதல்வர் த. ரவிசங்கர் அவர்களின் தலை மையிலும் நடை பெற்றது.

இந்த பயிலரங்கில் தமிழ்த்துறை பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள், சுயநிதி பிரிவைச் சேர்ந்த பிறதுறை பேராசிரியர்கள் மற்றும் இளநிலை இறுதியாண்டு மாணவர்கள் ஏராளமானோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டவர், இதே கல்லூரியின் முன்னாள் மாணவரும், தற்போது நீலகிரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை உதவி பேராசிரியருமான ம. கார்த்திகேயன்.

மாணவர்களிடையே பேசிய அவர், தமிழ் மொழியின் தொன்மை, அதன் சிறப்புகள், இன்றைய காலகட்டத்தில் அடிப்படை தமிழை அறிந்து கொள்வதன் அவசியம் குறித்து எளிய முறையில், மாணவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் சிறப்புரையாற்றினார்.

தமிழ் மொழியின் பெருமையை உணர்த்தும் வகையில் இந்த பயிலரங்கம் மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாக மாணவர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.



## ஆண்டிபட்டி பகுதியில் வளர்ச்சிப் பணிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் ஆய்வு

ஆண்டிபட்டி, அக்.09-

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா. வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆண்டிபட்டியில் ரூ.11.70 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்குச் செல்வதற்காக ரூ.112.17 இலட்சம் மதிப்பீட்டில் 900 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள தார்ச்சாலையின் தரம் மற்றும் அளவீடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு செய்தார்.மேலும், ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளையும் நேரில் பார்வையிட்டு, பணிகளின் முன்னேற்றம் மற்றும் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, கூட்டுறவு பண்டகசாலை நியாய விலைக் கடைகள், ஆண்டிபட்டி சமூகநீதி கல்லூரி மாணவர் விடுதி மற்றும் தேக்கம்பட்டி மாவட்ட சிறைச்சாலை ஆகிய இடங்களிலும் மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மேற்கொள்ளப்படும் கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி பணிகள் தரமான முறையில், நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

## 25 வருடங்கள் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பொது வாழ்க்கை நிரைவடைந்ததை தாம்பரத்தில் 100க்கும் மேற்பட்ட பாஜகவினர் கையில் ஜோதி ஏந்தி பேரணியாக சென்று கொண்டாடினர்

தாம்பரம், அக்.09-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் 25 வருடங்கள் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பொது வாழ்க்கை நிரை வடைந்ததை தாம்பரத்தில் 100க்கும் மேற்பட்ட பாஜகவினர் கையில் ஜோதி ஏந்தி பேரணியாக சென்று கொண்டாடினர்.







அக்டோபர் 7 2001 ஆம் ஆண்டு பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் முதல் முறையாக குஜராத் மாநில முதலமைச்சராக பொறுப்பேற்றார்,

தொடர்ந்து மூன்று முறை குஜராத் முதலமைச்சராகவும் ,மூன்று முறை பாரத பரதமராகவும் பொறுப்பேற்று இன்றோடு 25 வருடங்கள் பொதுவாழ்க்கை நிரைவடைந்த நிலையில் அதனை கொண்டாடும் விதமாக செங்கல்பட்டு மாவட்ட வடக்கு பா.ஜ க சார்பில் 100க்கும் மேற்பட்ட பாஜகவினர் தாம்பரம் சண்முக சாலையில் இருந்து கையில் ஜோதி ஏந்திய படி வந்தேமாதரம் கோசஙகள்யிட்டபடி பேரணியாக சென்றவர்கள் தாம்பரம் பேருந்து நிலையத்திற்க்கு வந்தடைந்தனர்,

பின்பு 2047 ல் வளர்ச்சியடைய உள்ள இந்தியாவை உருவாக்க நாம் நமது பங்களிப்பு மற்றும் அர்பணிப்பை வழஙகுவோம் என்று உறுதி மொழியை ஏற்றுகொ ண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் மாநிலத் துணைத் தலைவர் டால்பின் ஸ்ரீதர், மாநிலச் செயலாளர் மீனாட்சி நித்தியா சுந்தர், செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் செங்கை ரகுராமன், மாநில இளைஞரணி செயற்குழு உறுப்பினர் ஆர்.உப்பிலி ஸ்ரீனிவாசன், செங்கல்பட்டு வடக்கு மாவட்ட இளைஞர் அணி பொதுச் செயலாளர் தென்னரசு மற்றும் மாநில மாவட்ட நகர மண்டல நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## "அமைதி நோபல் பரிசுக்கான அத்தனை தகுதியும் இருக்கிறது. ஆனால்..." - ட்ரம்ப் ஆதங்கம்

வாஷிங்டன், அக்.09-

"அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தான் 2026-ம் ஆண்டுக்கான நோபல் அமைதி பரிசைப் பெறுவதற்கான அத்தனை தகுதிகளும் உள்ளது. ஆனால் அது தனக்குக் கிடைக்குமா என்பது சந்தேகமே," என்று ஆதங்த்துடன் கூறியுள்ளார்.

அமைதிக்கான நோபல் பரிசை நார்வே நோபல் குழு நாளை (அக்டோபர் 9, 2026) அறிவிக்க உள்ள நிலையில் ட்ரம்ப் இவ்வாறாகக் கூறியுள்ளார்.

இது குறித்து ஓவல் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப். "2026 விருது குறித்து நோபல் விருதுக் குழுவினர் என்ன முடிவு எடுக்கப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியாது. என்னைப் போன்றவர்களுக்கு அமைதிக்கான நோபல் பரிசை வழங்குவதில்லை என்ற பெயர் அவர்களுக்கு உண்டு என நினைக்கிறேன்.

ஆனால், கடந்த ஆண்டு அதை நான் மறைமுகமாகப் பெற்றதில் எனக்குப் பெரும் மகிழ்ச்சிதான். வெனிசுலா நாட்டின் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோ எனக்கு அவர் பெற்ற நோபல் பரிசை சமர்ப்பணம் செய்தார். 8 போர்களை நிறுத்தியதைவிட வேறு என்ன தகுதி வேண்டும்?" என்று விமர்சித்துள்ளார்.



அமைதிக்கான நோபல் பரிசானது நாடுகளுக்கு இடை யேயான சகோதரத்துவத்தைப் பேணிய / ராணுவ மோதல்களை நிறுத்திய அல்லது கட்டுப்படுத்திய / அமைதி மாநாடுகளை நடத்திய, ஊக்குவித்த தனிநபர் அல்லது இயக்கங்களுக்கு வழங்கப்படுகிறது.

அந்த வகையில் 8 போர்களை தான் நிறுத்தியுள்ளதால் நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று ட்ரம்ப் வலியுறுத்தி வருகிறார்.

இந்த ஆண்டு அவருக்கு ஆதரவாக போப் லியோ, சர்வதேச நீதிமன்றம், பாலஸ்தீனிய பிரதேசங்களில் மனித உரிமைகளின் நிலை குறித்த ஐக்கிய நாடுகளின் சிறப்பு அறிக்கையாளர் ஆகியோர் பரிந்துரைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், பொருளாதாரம் மற்றும் உலக அமைதிக்காக பாடுபட்டோருக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது. 2026-ம் ஆண்டுக்கான நோபல் பரிசுகளை பெறுபவர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. மருத்துவம், இயற்பியல், வேதியியல் மற்றும் இலக்கியத் துறைகளுக் கான நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்டுவிட்டன. நாளை அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்படவுள்ளது மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.



■ மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைமை அலுவலகத்தில், மத்திய கூட்டுறவு வங்கி தலைமையகக் கிளை மூலம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் சார்பில் கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன் உதவி திட்டத்தின் கீழ் ரூபாய்.50,000 மதிப்பிலான காசோலையை பயனாளிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா இ.ஆ.ப., வழங்கினார்.



■ மதுரை மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மதுரை உரம் மற்றும் விவசாயப் பொருட்கள் சில்லறை விற்பனை நிலையத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் உலங்கள் மற்றும் வேளாண் இடுபொருட்களின் இருப்பு, விற்பனை மற்றும் விலை விபரங்கள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா இ.ஆ.ப., கேட்டறிந்து விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் மற்றும் விவசாயப் பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைப்பதை உறுதி செய்ய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.



■ மதுரை மாநகராட்சி, மண்டலம்-2, அருள்மிகு ஸ்ரீ பூங்கா முருகன் கோயில் உண்டியல் எண்ணும் பணியினை மேயர்(பொ) நாகராஜன் தொடங்கி வைத்து பார்வையிட்டார். அருகில் இந்து சமய அறநிலையத் துறை (மதுரை மண்டலம்) உதவி ஆணையர் முத்துராமலிங்கம் , வடக்கு ஆய்வாளர் மதுசூதனராயர் அவர்கள், உதவி ஆணையாளர் தமிழரசன் , உதவி ஆணையாளர் (வருவாய்) கனிராஜ் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# சிவகங்கையில் நகராட்சி சுகாதாரப் பணியாளர்கள் தொடர் வேலைநிறுத்தப் போராட்டம்!

சிவகங்கை, அக்.09-

சிவகங்கை நகராட்சியில் பணியாற்றும் சுகாதாரப் பணியாளர்கள், பணிநிரந்தரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை களை வலியுறுத்தி, மாநிலம் தழுவிய தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தின் ஒரு பகுதியாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாநிலத் துணைத் தலைவர் வீரையா தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், மாவட்டத் தலைவர் உமாநாத், மாவட்டச் செயலா ளர்கள் முருகானந்தம், சேதுராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் சுகாதாரப் பணியாளர்கள் தங்களது நீண்டகால கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தினர்.






குறிப்பாக, நகராட்சி சுகாதாரப் பணியாளர்களைப் பணிநிரந்தரம் செய்ய வேண்டும், ஒப்பந்தத் தொழிலா ளர்களுக்கு அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதியத்தை வழங்க வேண்டும், சுகாதாரப் பணிகளைத் தனியார்மயமாக்கும் அரசாணைகளை ரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

மேலும், சுகாதாரப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், அவர்களின் கோரிக்கைகளுக்கு அரசு உரிய தீர்வு காணவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் வலியுறுத்தினர்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நிர்வாகிகள் அய்யம்பாண்டி, வேங்கையா, விஜயகுமார், தெய்வீகப்பாண்டியன் உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்கள் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

# மதுரை வடமலையான் மருத்துவமனையில் அதிநவீன ரோபோடிக் அறுவைசிகிச்சை அறிமுகம்

மதுரை, அக்.09-

தென் தமிழகத்தில் துல்லியமான மற்றும் உலகத்தரம் வாய்ந்த மருத்துவ சேவைகளில் புதிய அத்தியாயத்தை உருவாக்கும் வகையில், மதுரை வடமலையான் மருத்துவமனையில் அதிநவீன SSI ரோபோடிக் அறுவைசிகிச்சை முறை அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் மூலம் மேம்பட்ட ரோபோடிக் அறுவைசிகிச்சை சிகிச்சைகளை மதுரை மற்றும் சுற்றுவட்டாரப் பொதுமக்களுக்கு அருகிலேயே வழங்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

வடமலையான் மருத்துவமனையில் நடைபெற்ற தொடக்க விழாவில், மருத்துவமனையின் இணை நிர்வாக இயக்குநர் சந்திரா புகழகிரி குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.



மருத்துவமனையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் வ. புகழகிரி வரவேற்றுப் பேசினார்.

அப்போது அவர் கூறுகையில், “கடந்த 70 ஆண்டுகளாக மருத்துவத் துறையில் பல்வேறு புதுமைகளையும், உயர்தர மருத்துவ சேவைகளையும் வழங்கி வரும் வடமலையான் மருத்துவமனை, தற்போது SSI ரோபோடிக் அறுவைசிகிச்சை முறையை அறிமுகப்படுத்துகிறது. மேம்பட்ட, எளிய மற்றும் அனைவருக்கும் கிடைக்கக்கூடிய இந்த சிகிச்சை, மனிதநேயத்துடன் கூடிய நவீன மருத்துவத்தின் முக்கிய மைல்கல்லாகும்” என்றார்.

ஹைதராபாத் பரீத்தி சிறுநீரக மருத்துவமனையின் நிர்வாக இயக்குநரும், சிறுநீரகவியல் துறைத் தலைவருமான டாக்டர் Vaddichandramohan சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, அதிநவீன ரோபோடிக் அறுவைசிகிச்சை முறையை தொடங்கி வைத்தார். தொடர்ந்து, அதன் சிறப்பம்சங்கள் மற்றும் மருத்துவப் பயன்கள் குறித்து விளக்கமளித்தார்.

SSI Innovations நிறுவனத்தின் துணைத் தலைவர் சீனிவாச ரெட்டி வாழ்த்திப் பேசினார். மருத்துவ சேவைகள் இயக்குநர் எஸ். சுந்தரராஜன் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் இதயம் மற்றும் நெஞ்சக அறுவைசிகிச்சை நிபுணர் பி. பாபு, மருத்துவ இயக்குநர் வி. பாப்புநாதன், புற்றுநோய் அறுவைசிகிச்சை நிபுணர் எஸ். அழகுகணேஷ், இரைப்பை மற்றும் குடல் அறுவைசிகிச்சை நிபுணர் என்.ஆர். வெங்கடேஷ், சிறுநீரக மருத்துவர்கள் ஜே. சதீஷ்கின்னி, விவேக், மகப்பேறு மருத்துவர்கள் எஸ். பாலசரஸ்வதி, டாக்டர் பாரதி, டாக்டர் டி. கார்த்திகா, பொது அறுவைசிகிச்சை நிபுணர் அழகுமுத்து உள்ளிட்ட மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



# ஜிஎஸ்டி அதிகாரிகளுக்கு இனி கைது செய்யும் அதிகாரம் இல்லை

## ஜிஎஸ்டி கவுன்சில் ஒப்புதல்

புதுடெல்லி, அக்.09-

ஜிஎஸ்டி அதிகாரிகளின் கைது அதிகாரம் ரத்து செய்யப்படுவதற்கு, டெல்லியில் நடைபெற்ற ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

57-வது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் இன்று நடைபெற்றது. மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கர்நாடகா, ஹரியானா, கோவா, ஜம்மு காஷ்மீர், டெல்லி உள்ளிட்ட மாநிலங்களின் முதல்வர்கள், நிதி அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய நிர்மலா சீதாராமன், “ஜிஎஸ்டி அதிகாரிகளின் கைது அதிகாரம் ரத்து செய்யப்படவும், வழக்கு தொடங்குவதற்கான வரம்பு ரூ.1 கோடியில் இருந்து ரூ.5 கோடியாக உயர்த்தவும் ஜிஎஸ்டி கவுன்சில் ஒப்புதல் அளித்துள்ளது.

குறைந்தபட்ச தண்டனை முறை நீக்கப்பட்டு, அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் என தண்டனையை தீர்மானிக்கும் அதிகாரம் நீதித்துறை முடிவுக்கு விடப்படுகிறது.

வருமான வரித் தாக்கல் தாமதமாக செய்தாலோ, தவறு செய்தாலோ வரி செலுத்துவோருக்கு அபராதம் மட்டுமே விதிக்கப்படும். அதற்கு மேற்பட்ட நடவடிக்கைகள் இருக்காது. பொது அபராதத் தொகை ரூ.25,000-ல் இருந்து ரூ.10,000 ஆக குறைக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ள அனைத்து அம்சங்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. சீர்திருத்தம் தொடர்பான இன்றைய நிகழ்ச்சி நிரலின் அனைத்து அம்சங்களும் 2027, ஏப்ரல் 1 முதல் நடைமுறைப்படுத்தப்படும்” என தெரிவித்தார்.

# சிவகங்கையில் மின்சார மீட்டர் ரீடிங் எடுக்காததால் பொதுமக்கள் அவதி!

## 3,200-க்கும் மேற்பட்ட வீடுகளில் மின்கட்டணக் கணக்கீடு தாமதம் எனப் புகார் கூடுதல் கட்டணம் ஏற்படுமோ என நுகர்வோர் அச்சம்

சிவகங்கை அக்.09-

சிவகங்கை நகரை ஒட்டியுள்ள ஆயுதப்படைக் காவலர் குடியிருப்புப் பகுதியில், கடந்த மாதத்திற்கான மின்சார மீட்டர் ரீடிங் எடுக்க மின்வாரியப் பணியாளர்கள் இதுவரை வரவில்லை எனப் பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

சிவகங்கை நகர்ப் பகுதி மற்றும் அதனை ஒட்டியுள்ள குடியிருப்புகளில் சுமார் 3,200-க்கும் மேற்பட்ட வீடுகளில் மின்சாரப் பயன்பாட்டைக் கணக்கிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படு கிறது.

மின்கட்டணம் அதிகரிக்கும் அபாயம்?

வழக்கமான கால இடைவெளியில் மின்சார மீட்டர் ரீடிங் எடுக்கப்படாததால், மின்சாரப் பயன்பாடு அதிகமாகக் கணக்கிடப்பட்டு கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுமோ என நுகர்வோர் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, வீட்டு மின்நுகர்வோருக்கான இலவச மின்சாரச் சலுகை மற்றும் கட்டணப் படிநிலைகளைக் கணக்கிடும்போது, ரீடிங் எடுப்பதில் ஏற்படும் தாமதம் தங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் எனப் பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.




இருப்பினும், ரீடிங் தாமதமானதால் கூடுதல் கட்டணம் விதிக்கப்படுமா என்பது சம்பந்தப்பட்ட மின்வாரியத்தின் கணக்கீட்டு நடைமுறையைப் பொறுத்தே அமையும்.

மின்வாரிய நிர்வாகம் மீது குற்றச்சாட்டு

மீட்டர் ரீடிங் எடுப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கு மின்வாரிய நிர்வாகக் குறைபாடுகளே காரணம் எனச் சிலர் குற்றம்சாட்டியுள்ளனர்.

மேலும், சிவகங்கை மேற்பார்வைப் பொறியாளர் அலுவ லகத்தின் செயல்பாடுகள் குறித்தும் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

எனினும், குறிப்பிட்ட அலுவலரின் செயல்பாடுகளே இந்தத் தாமதத்திற்குக் காரணம் என்பதற்கான அதிகாரப்பூர்வ ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

மின்சார மீட்டர் ரீடிங் எடுப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு, அனைத்து வீடுகளிலும் உரிய காலக்கணக்கின்படி மின்பயன்பாட்டைப் பதிவு செய்ய வேண்டும் எனப் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், தாமதத்தால் நுகர்வோருக்கு கூடுதல் கட்டணச் சுமை ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 40 நாள் வேலைக்கு ரூ.200 மட்டுமே வரவு எனப் புகார்: மானாமதுரையில் 100 நாள் வேலைத் திட்டத் தொழிலாளர்கள் திடீர் சாலை மறியல் போக்குவரத்து பாதிப்பு!

மானாமதுரை, அக்.09-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு முழுமையான கூலி வழங்கப்படவில்லை எனக் குற்றம்சாட்டி, கிராம மக்கள் மானாமதுரை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

40 நாள் வேலைக்கு ரூ.100 முதல் ரூ.300 வரை மட்டுமே வரவு!

மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தெ.புதுக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் கடந்த 40 நாட்களாகப் பணியாற்றியதாகத் தெரிவித்தனர்.





ஆனால், வேலை செய்த நாட்களுக்கான முழுமையான கூலித் தொகை வழங்கப்படாமல், தங்களது வங்கிக் கணக்குகளில் ரூ.100, ரூ.200, ரூ.300 என்ற அளவில் மட்டுமே பணம் வரவு வைக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் குற்றம்சாட்டினர்.

இதனால் அதிருப்தியடைந்த தொழிலாளர்கள் மற்றும் கிராம மக்கள் மானாமதுரை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு திரண்டு முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிவகங்கை பிரதான சாலையில் மறியல்!

தொடர்ந்து, மானாமதுரை சிவகங்கை பிரதான சாலையில் அமர்ந்து தொழிலாளர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அப்பகுதியில் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன், பரபரப்பான சூழல் நிலவியது.

“நாங்கள் வேலை செய்த நாட்களுக்கான முழுக் கூலியையும் உடனடியாக வழங்க வேண்டும். வங்கிக் கணக்கில் குறைந்த தொகை வரவு வைக்கப்பட்டதற்கான காரணத்தை அதிகாரிகள் விளக்க வேண்டும். கூலி வழங்குவதில் ஏற்பட்டுள்ள குளறுபடிகளைச் சரிசெய்ய வேண்டும்” எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

காவல் ஆய்வாளர் தலைமையில் பேச்சுவார்த்தை!

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த மானாமதுரை காவல் ஆய்வாளர் ராமச்சந்திரன், போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குள் அழைத்துச் சென்றார்.

அங்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தொழிலாளர்கள் மற்றும் கிராம மக்களிடம் பேச்சுவார்த்தை மேற்கொண்டனர்.

அதிகாரிகள் அளித்த விளக்கத்தை ஏற்காமல் தொழிலா ளர்கள் வாக்கு வாதத்தில் ஈடுபட்டதால் தொடர்ந்து பரபரப்பு நிலவியது.

கூலி வழங்குவதில் ஏற்பட்டதாகக் கூறப்படும் குளறுபடிகள் குறித்து அதிகாரிகள் உரிய விசாரணை நடத்தி, நிலுவைத் தொகை இருப்பின் உடனடியாக வழங்க வேண்டும் எனத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161